## சுருக்கம்

பள்ளிக்கல்வி – பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி – தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் மேலாண்மைக் குழு மற்றும் நிர்வாக அலுவலர் குழு – இந்திய ஆட்சிப் பணி நிலையில் உறுப்பினர் – செயலர் நியமனம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (MS)த்துறை

அரசாணை (1டி) எண்.180 நாள் 03 .04.2018
திருவள்ளுவராண்டு, 2049
ஹேவிளம்பி வருடம் பங்குனி 20

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (1டி)எண்.346 பள்ளிக்கல்வி (பொ.நூ.2)த்துறை, நாள் 12.06.2017.
2. அரசாணை (வாலாயம்) எண்.781, பொது (Spl.A) துறை, நாள் 05.03.2018.
3. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரின், கடித ந.க.எண்.680/ஆ3/2018, நாள் 22.03.2018.

--------

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் மேலாண்மைக் குழு மற்றும் நிர்வாக குழு ஆகியவற்றின் உறுப்பினர் செயலராக திரு. கே. நந்தகுமார், இ.ஆ.ப., மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு 12.06.2017 முதல் பணிபுரிந்து வந்துள்ளார். அவர் தற்போது மாறுதலில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு, அவருக்கு பதிலாக அனைவருக்கும் கல்வி இயக்கக திட்ட இயக்குநராக திரு. ஆர். சுடலைகண்ணன், இ.ஆ.ப., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

2. தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் சார்ந்த வங்கி கணக்குகள் அனைத்தையும் பராமரிக்கும் அதிகாரம், மேலாண்மைக் குழுவினரால், உறுப்பினர்–செயலருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே மேற்படி ஆணையத்தின் உறுப்பினர்– செயலராக பணியாற்றிய திரு. கே. நந்தகுமார், இ.ஆ.ப. அவர்கள் பணிமாறுதல் செய்யப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் டி.பி.ஐ வளாகத்தில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் இந்தியன் வங்கிகளில் உள்ள, தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் சார்ந்த கணக்குகள் மேலாண்மைக் குழுவால் உறுப்பினர்–செயலர் மற்றும் பள்ளி சாரா (ம) வயது வந்தோர் கல்வி இயக்குநரால் பேணப்படும் இணை வங்கிக் கணக்குகளை இயக்குவதற்கு (Operation of S.B. Accounts and Renewal of F.D. Accounts) ஏதுவாக மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி அனைவருக்கும் கல்வி இயக்கக மாநிலத் திட்ட இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஆர். சுடலைகண்ணன், இ.ஆ.ப., அவர்களை தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் மேலாண்மை குழு மற்றும் நிர்வாக குழுவின் உறுப்பினர் – செயலராக நியமனம் செய்து ஆணை வழங்கிடுமாறு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரின் கோரிக்கையை ஏற்று அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் மாநில திட்ட இயக்குநராக இந்திய ஆட்சிப் பணி நிலையில் பணிபுரிந்து வரும் திரு. ஆர் சுடலைகண்ணன், இ.ஆ.ப., அவர்களை தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் மேலாண்மை குழு மற்றும் நிர்வாக அலுவலர் குழு ஆகிய அமைப்புகளின் உறுப்பினர் – செயலராக நியமனம் செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் மேலாண்மை குழு மற்றும் நிர்வாக அலுவலர் குழு ஆகியவற்றின் முழுநேர உறுப்பினராக செயல்படுவார். அவ்வாறு செயல்படுகையில், இவர் மேற்படி குழுக்களின் உறுப்பினர் – செயலரின் அதிகாரத்திற்குட்பட்டு, அன்னாரின் கருத்துரைகளின் பேரில் செயல்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

5. ஏற்கனவே, வெளியிடப்பட்ட அரசாணையில், நியமிக்கப்பட்டுள்ள இதர உறுப்பினர்கள் இதன்படி தொடர்ந்து, மேற்குறிப்பிட்டுள்ள இரு அமைப்புகளிலும் செயல்படுவார்கள் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

திரு. ஆர் சுடலைகண்ணன், இ.ஆ.ப.,
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை–6.
பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர், சென்னை–6.
தலைமைச் செயலாளர், தலைமைச் செயலகம்,சென்னை–9.
முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை,சென்னை–9
முதன்மைச் செயலாளர், நிதித் துறை,சென்னை–9.
முதன்மைச் செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்பநலம்,சென்னை–9.
முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர் (பொது), சென்னை–18.
செயலாளர், மைய அரசு (முதியோர் கல்வி),மனிதவள மேம்பாட்டு வளர்ச்சி அமைச்சகம்,
புது டில்லி–110 001.
சம்பந்தப்பட்ட அனைத்து உறுப்பினர்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
3-4-18